Medical Colleges

* 308 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Health be pleased to state the names of the Medical Colleges in the State (i) which have been recognised and (ii) which have not been recognised by the Medical Council of India?

மருத்துவக் கல்லூரிகள்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): 'மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இந்திய மருத்துவக் கழகத்தால், (i) இம்மாநிலத்தில் ஏற்பளிக்கப் பட்டுள்ள, (ii) ஏற்பளிக்கப்படாமலுள்ள மருத்துவக் கல்லூரிகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) சென்னை மருத்துவக் கல்லூரி சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை, மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி தஞ்சாவூர்.

(இ) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, ஏற்பளிக்கப்படாமல் உள்ள மருத்துவக் கல்லூரிகள் ஏதாவது இருக்கின்றனவா என்பதுதான் கேள்வி. (குறுக்கீடு) 3 கல்லூரிகள் இருப்பதாக அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து தெரிகிறது. இந்திய மருத்துவக் குழு அதற்கு என்ன காரணம் கூறுகிற தென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு தலைவரவர்களே, ஒவ்வொரு கல்லூரியும் முறைப்படி நடக்கிறதென்று ஏற்றுக்கொள்வதற்காக இந்திய மருத்துவக் குழு பல விதி முறைகளை அமைத்திருக்கிறார்கள். ஒரு கல்லூரி யிலே சேர்க்கப்படுகிற மாணவர்கள் 5½ ஆண்டுக்காலம் படிக்கிறார்கள். அப்படி எவ்வளவு பேர் பயில்கிறார்களோ, அனைவரும் பயிற்சி பெறுவதற்குத் தேவையான பகுக்கை வசதி, லேபராட்டரி வசதி, லைப்ரரி வசதி, அவர்களுக்கு தங்கும் இட வசதி, அவர்களுக்குத் தரப்பட வேண்டிய பயிற்சியைத்

1974 ஏப்ரல் 11]

தரத்தக்க தேர்ச்சி பெற்ற பேராசிரியர்கள் இடம் பெறுகிற வாய்ப்பு, பல்வேறு துறைகள் தனித் தனித் துறைகளாக வளர்ந்த நிலையில் அமைவது—இப்படி பல பகுதிகள் ஒவ்வொரு கல்லூரியிலும் இடம் பெற வேண்டும். புதிதாகத் துவக்கிய கல்லூரிகளுக்கு அதிக கவனத்தை அரசு செலுத்தினாலும்கூட, அது வளர்வதற்கு 10, 15 ஆண்டுக்காலம் ஆகிறது. 100 ஆண்டுக் காலமாக நடைபெறுகிற ஒரு கல்லூரி, 75 ஆண்டுக் காலமாக நடைபெறுகிற ஒரு கல்லூரி, 50 ஆண்டுக்காலமாக நடைபெறுகிற ஒரு கல்லூரி பெறுகிற அதே வசதிகளை, வாய்ப்புகளை 10 ஆண்டுக் காலத்தில், 15 ஆண்டுக் காலத்தில் எந்தக் கல்லூரியும் பெற முடிவதில்லை. அந்த வகையிலே, செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் புதிதாகத் துவக்கப்பட்ட, அண்மைக் காலத்திலே துவக்கப்பட்ட மூன்று கல்லூரிகள் வளர வேண்டிய ஒரு கட்டத்தில் இருக்கின்றன. அவைகள் வளருவதற்கான பல பகுதிகளை உருவாக்குவதற்காக ஆண்டுதோறும் ஒவ்வொரு கல்லூரிக்கும் 20 லட்சம், 25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, பல காரியங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால் ஒவ்வொரு கல்லூரிக்கும் 1 கோடி ரூபாய்க்கு மேலே வளர்ச்சிப் பணிக்குத் தேவைப்படுகிறது. இதை மற்றவர்கள் கவனிக்காவிட்டாலும் நண்பர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கவனித்திருக்கக்கூடும். இவ்வளவு பணம் தேவைப்படுகிற ஒரு கட்டத்தில், அதற்கு ஈடுகொடுத்து ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றக்கூடிய சக்தி இந்த அரசுக்கு இல்லையென்பதையும், மத்திய அரசு இப்படிப்பட்ட நல்ல முயற்சிக்கு தனி வகையில் பணம் ஒதுக்குகிற திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அங்கீகாரம் பெறுவதற்கு தொடர்ந்து முயற்சி எடுக்கப்படுகிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, may I know what are the grounds generally recognised by the Medical Council to dissociate institutions from granting recognition? Because I find that in the recent notification an institution like the Manipal Medical College which has sent out so many graduates in medicine all over the world and who are serving in the best hospitals in New York, Washington and other places has been recognised, I would like to know what are the criteria adopted by the Medical Council in these matters.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே. இந்திய மருத்துவக் குழுவினர் எந்த அடிப்படையிலே நிராகரிக்கிறார்களென்பதை தமிழக அரசிலே, பொறுப்பிலே உள்ள நான் சொல்லுவதென்பது இயலாத காரியம். எப்படி பல்கலைக் கழகம் எந்த ஒரு கலைக் கல்லூரியாக இருந்தாலும், அது

இந்த அளவுக்குத் தரமுள்ளதாக இருந்தால்தான் ஒத்துக்கொள்வதென்ற முறை வைத்திருக்கிறதோ அப்படி இந்தியாவிலுள்ள எந்த மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும், குறிப்பிட்ட தரமுடையதாக இருக்க வேண்டு மென்ற முறையை இந்திய மருத்துவக் குழுவினர் வைத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள கல்லூரிகளுள், இந்த மூன்று கல்லூரிகளும் இன்னும் அந்தத் தரமளவுக்கு வந்து சேரவில்லையென்று சொல்லுகிறார்கள். அரசாங்கமே பல லட்சக் கணக்கான ரூபாய் செலவிட்டு, இந்தக் கல்லூரிகளை நடத்துகிறது. செங்கற்பட்டுக் கல்லூரிக்கு இதுவரை ஏறத்தாழ 1 கோடி ரூபாய்க்கு மேலே செலவாகியிருக்கிறது. திருநெல்வேலி கல்லூரிக்கு ஏறத்தாழ 90 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகியிருக்கிறது. நான் சொல்லுகின்ற கணக்கு பரிசோதனைக்குரியதல்ல. அதனால்தான் 'ஏறத்தாழ' என்று சொல்லுகிறேன். கோவைக் கல்லூரிக்கு ஏறத்தாழ 1 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகி யிருக்கிறது. இன்னும் ஒவ்வொன்றுக்கும் 1 கோடி ரூபாய்க்கு மேல் தேவைப் படுகிறது. இப்படி பணம் தேவைப்படும் கட்டத்தில், அந்த வளர்ச்சிப் பணிகள் அத்தனையும் முடிவடைந்ததற்குப் பின்னர் அங்கு தேறி வருகிற மாணவர்களை நாங்கள் 'ரெகக்னைஸ்' செய்வோம்; அப்போது அந்தக் கல்லூரி 'ரெகக்னைஸ்டு' கல்லூரியாகுமென்று சொல்லுகிறார்கள். இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ நிறைவேறிவிடுமென்று எதிர்பார்த்து நாம் செயல் படுகிறோம். மற்ற இடங்களிலுள்ள கல்லூரிகள் நடத்தப்படுகிற முறை களிலிருந்தே, அகில இந்திய மருத்துவக் குழு அவைகளுக்கு ஒப்புதல் அளிக்க முடியாத நிலை இருக்கலாம். அது பற்றிய விவரம் எனக்குத் தெரியாது.

THIRU G. VASANTHA PAI: Sir, for how many years has each of these institutions not been recognised?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இவை அண்மைக் காலத்தில் தொடங்கப்பட்டவை. பிறந்ததிலிருந்தே பெயர் வைக்கப்படவில்லை.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இப்போது கேள்வியில் எழுப்பப் பட்டு, அமைச்சரால் பதில் அளிக்கப்பட்டுள்ள மூன்று கல்லூரிகளும் அரசினால் நடத்தப்படும் கல்லூரிகளாகும். தனியார் நடத்தும் கல்லூரிகளை 'ரெகக்னைஸ்' பண்ணாமல் போய்விட்டால், அதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அரசே நடத்தும் மருத்துவக் கல்லூரிகள் 'ரெகக்னைஸ்' செய்யப்படாமல் உள்ளன. டெக்னிகலாக குறைகள் இருப்பதால்தான் 'ரெகக்னைஸ்' பண்ண வில்லையென்று என்னைப் போன்றவர்கள் உணருகிறோம். அங்கு படிக்கும் மாணவர்கள் நிலைமை என்ன என்பதை அறிய விரும்புகிறேன். இம்மாதிரி 'ரெகக்னைஸ்' பண்ணவில்லையென்று சொன்னால், அங்கு படித்து பட்டம் பெற்று, வெளியேறுகிற மாணவர்களுக்கு—நமது மாநிலத்தில் மதிப்பு உண்டு—வேறு மாநிலங்களில் மதிப்பு இல்லாமல் போய்விடுமாவென்றும் அறிய விரும்பு

1974 ஏப்ரல் 11]

கிறேன். அப்படியென்றால், அது மாணவர்களைப் பாதிக்கும் நிலைமையை ஏற்படுத்துமே. எனவே இப்படிப்பட்ட ஒரு நிலைமை உண்டாகுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களிலே இவர்களுக்குப் பட்டங்கள் வழங்கப்படுகின்றன. பட்டம் வழங்குவது குறைபாடு உடையதென்று சொல்லுவதற்கு இடம் கிடையாது. அகில இந்திய மருத்துவக் குழு ஒப்புக்கொண்ட கல்லூரியில் பட்டம் பெற்றால், வெளி நாடுகளிலே சில தேர்வுகளுக்கு அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால், அதையே கூட ஏற்றுக்கொள்ளாமல், அமெரிக்காவில் உள்ளவர்கள் தனியாகத் தேர்வு நடத்துவது நமக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். ஒவ்வொரு நாட்டிலேயும், மருத்துவத் துறையிலே இன்ன ஸ்டான்டர்டு இருக்க வேண்டுமென்று வேறுபட்ட கருத்துடையவர்கள் இருக்கிறார்கள். இங்கிலாந்தில் ஒப்புக்கொள்ளப்படுகிற அதே தகுதிகள் அமெரிக்காவில் ஒப்புக்கொள்ளப் படுவதில்லை. அமெரிக்காவில் ஒப்புக்கொள்ளப்படுகிற அதே தகுதிகள் இங்கிலாந்தில் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. வேற்றுமை இருக்கிறது. இந்தியாவில் எல்லாக் கல்லூரிகளுக்கும் ஒரு சிறப்புத் தகுதியைத் தந்து, ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கிற அந்தக் குழு, நம்முடைய கல்லூரிகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கண்ணோட்டத்தில்தான் இந்த முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். எனவே பட்டம் பெற்று வருகிற நம் மாணவர்கள் இதனால் வாய்ப்புகளை இழந்து விடுவார்களென்று கூற முடியாது. இன்னும் சொல்லப் போனால் ஓரிரு ஆண்டுகளுக்குப் பின்னால் இந்தக் கல்லூரி ஒப்புக் கொள்ளப்பட்டால், அன்று 'ரெகக்னைஸ்டு' கல்லூரியில் பட்டம் பெற்றவரென்ற பெயர்தான் வருமே தவிர, "before the date of recognition" என்று சொல்லி யாரும் குறைபடப் போவதில்லை. இன்றைக்குத் தேறினாலும்கூட, நாளைக்கு அந்தக் கல்லூரி ஏற்றுக்கொள்ளப்பட்டால், வரலாற்று உரிமை போல, அந்த உரிமையை மாணவர்கள் பெறுவார்கள். இதில் 'டி-ரெகக்னைஸ்டு' என்ற கருத்துக்கே இடம் கிடையாது. ஏற்கெனவே 'ரெகக்னைஸ்' செய்த இடத்திலே, 'டி-ரெகக்னைஸ்' செய்தால்தான், அது பெரிய குறையாக, பெரிய குற்றச்சாட்டாகத் தோன்றும். இதுவரை இந்தக் கல்லூரிகள் 'ரெகக்னைஸ்' செய்யப்படவில்லை. நாம் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறோம்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, போஸ்ட் கிராஜுவேட் கோர்சுக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக மாணவர்கள் பொறுக்கி எடுக்கப்படுகின்றனர். இந்த மூன்று கல்லூரிகளிலும் படித்து, எம்.பி.பி.எஸ்,

பட்டம் பெற்ற டாக்டர்கள் எம்.டி., எம்.எஸ்., படிப்புக்கு மனுச் செய்தால், அவர்களைக் கொஞ்சம் தரம் குறைந்தவர்களென்று ஒதுக்கிவிடுவார்களா அல்லது ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, மதுரை மருத்துவக் கல்லூரி, எம்.எம்.சி. போன்ற மருத்துவக் கல்லூரிகளில் பட்டம் பெற்றவர்களுக்குள்ள அதே தரத்தை இவர்களுக்கும் அளிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்பொழுது பட்ட மேற்படிப்புத் துறைகளிலே பயிற்சி பெறுவதற்கு எல்லா மாணவர்களும் சேர வாய்ப்பு இருக்கிறது. ஆனால் பொதுவாக மாணவர்களுக்கு நேரடியாக மேற்பட்டப் படிப்புக்கு வாய்ப்புத் தருவது என்பது வர வர தடுக்கப்பட்டு வருகிறது. காரணம், அவர்கள் நேர்முகமாக மருத்துவத் துறையிலே இரண்டு மூன்று ஆண்டுக்காலம் கிராமப்புறங்களிலே எல்லாம் பணியாற்றிவிட்டு மேற் படிப்புக்கு வருவது நல்லது என்று கருதப்படுவதுதான். இங்கே ஏற்படுத்தி யிருக்கிற அத்தனை பட்டங்களும் மருத்துவக் குழு ஒப்புக்கொண்ட பட்டங்கள். அவை பல்கலைக் கழகத்தாலே அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளிலே எந்த மாணவர்களாக இருந்தாலும், இந்தப் பட்டம் பெற்றவர்கள் அவர் களுக்குத் தேவையான பிற தகுதிகள் இருக்குமானால், சேர்ந்து படிப்பதற்குத் தடையில்லை.

Thiru A. R. DAMODARAN : Sir, may I know if the boys who pass out of the Chingleput, Tirunelveli and Coimbatore Medical Colleges will be admitted to the All India Medical Institutions? If this Degree is not recognised by the Indian Medical Council, will these boys be affected when they seek employment in other States or seek admission to Institutes in other States?

The Hon. Thiru K. ANBAZHAGAN : Sir, for that matter, I can say that all the students with recognised Degrees are not admitted there. Only some people are selected. The selection may be based on any such principles, which I am not aware of.

Thiru A. R. DAMODARAN : Sir, I know that only a few boys are selected. My point is whether these degrees are basically recognised by other Universities in India.

1974 ஏப்ரல் 11]

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, as these Degrees are conferred by the Madras and Madurai Universities, I hope that every University has to recognise them. Only certain Councils may not recognise them, about which I am not much bothered.

THIRU G. VASANTHA PAI : Sir, the Hon. Minister may not be bothered about it, but what about the degree-holders?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, they are expected to do much service to the people. I hope that the field is always open if they have got a mind.

THIRU A. R. DAMODARAN : Sir, I am not able to understand this. If there is no statutory recognition required by the Indian Medical Council, then why should we bother about derecognition or recognition by the Indian Medical Council?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, certain policies are always adopted for certain purposes which may affect or may not affect. In general and also in practice, the recognition is very much appreciated by everyone and, therefore, we also want to get the recognition of the Medical Council. It is intended for the purpose of recognising Colleges which are for Medical Education and so we want the recognition. At the same time, the formula for recognising the Degrees for purposes of appointment and other things is already in vogue. As the Universities confer the Degrees, the State Government recognises them and many other States also recognise them.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் வேலூர் மருத்துவக் கல்லூரிதான் தனியாரால் நடத்தப்படுவது. அதற்கு இந்திய மருத்துவக் கழகம் ஏற்பு அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மிகச் சிறப்பாக நீண்டகாலம் நடைபெறுகிற அப்படிப்பட்ட எல்லா கல்லூரிகளும் மருத்துவக் குழுவாலே ஏற்றுக்கொள்ளப்பட்டுத்தான் இருக்குமே தவிர, அவைகளுக்கு எந்தவிதமான தடையும் இருக்காது.